TAMIL NADU LEGISLATURE
5 - SEP 1981
MADRAS

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

சனிக்கிழமை, 1981 பிப்ரவரி 28.

மாசி 17, ரௌத்திரி—2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மேலவை மண்டபத்தில், முற்பகல் 10-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் 95, 96 ஒத்தி வைக்கப் படுகின்றன.

அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்கள்.

* 97. வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:

(அ) அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்கள் 15—6—1980 நாளன்றுள்ளவாறு எத்தனை பேர்?

(இ) அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர் பதவிக்கான நியமனத் திற்கு, மாவட்ட அளவில் பணிமூப்பு (சீனியாரிட்டி) கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறதா? அல்லது மாநில அளவில் பணிமூப்பு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 104 பேர்கள்.

(இ) அரசிதழ் பதிவுபெற்ற தலைமையாசிரியர்கள் பதவிக்கான நியமனத்திற்கு மாநில அளவில் பணிமூப்பு (சீனியாரிட்டி) கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு வந்தது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாநில அளவிலே பணிமூப்பு அடிப்படை யில் அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்களின் பதவி உயர்வு இருந்த தாக அமைச்சரவர்கள் கூறினார்கள். குறிப்பிட்ட ஒருசில ஆண்டுகளிலே

[1981 பிப்ரவரி 28

'பி' பிரிவிலே பணியாற்றிய தலைமை ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவிலே பணிமூப்பு வைத்து, அவர்களுக்கு அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு கொடுத்து, பின்னர் அதாவது சென்ற ஆண்டு அந்தப் பதவியிலிருந்து அவர்கள் இறக்கப்பட்டுவிட்டார்கள் என்பது உண்மையா? 'ஆம்' என்றால் அதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மூன்றாவது சம்பளக் குழுவின் பரிந்துரைப்படி 1—4—1978 முதல் பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத தலைமை ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களை ஒரே விகிதத்தில் அரசு நிர்ணயித்துள்ளது. எனவே இந்தப் பாகுபாடு தேவையில்லை என்றாகிறது. அரசு ஆணை எண் 577, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 31—5—1979-ன்படி பதிவு பெற்ற அலுவலர், பதிவுபெறாத அலுவலர் என்ற பாகுபாடு நீக்கப்பட்டது. அரசு அலுவலர்கள் ஊதிய அடிப்படையில், ஏ. பி. சி. டி. என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். காலி ஏற்பட்ட மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் முதுகலைப் பட்டப் படிப்பு தகுதி வாய்ந்த நபர்களால் நிரப்பப்பட்டுள்ளன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: 1974 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், அந்த ஆண்டில் அரசு 'பி' பிரிவு பள்ளிகளிலே உள்ளவர்கள், மாவட்ட அளவிலேயுள்ள பணிமூப்பு அடிப்படையிலே பதவி உயர்வு செய்யப்பட்டார்கள். ஆனால் அப்படி பதவி உயர்வு செய்யப்பட்ட ஒருசில தலைமை ஆசிரியர்கள் திடீரென்று சென்ற ஆண்டு பதவியிலிருந்து இறக்கப்பட என்ன காரணம்? இது 'ஏ' பிரிவுக்கும், 'பி' பிரிவுக்கும் பாகுபாடு உண்டாக்குவது போல இருக்கிறது. அதுவும் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு இணைப்பிற்குப் பிறகு இப்படிச் செய்யப்பட்டதாக அறிகிறேன். இது உண்மையா? ஆம் என்றால் அதற்குக் என்ன காரணம்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட விவரங்கள் எதுவுமில்லை எனக்குத் தரப்பட்டிருக்கிற விவரம் 'ஏ' பிரிவில் 80 பதிவு பெற்ற தலைமை ஆசிரியர் பதவிகளும், 'பி' பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 80 பதிவு பெற்ற தலைமை ஆசிரியர் பதவிகளும் இருந்தன என்பது தான். அந்த அடிப்படையிலேதான் முன்னாலே இருந்திருக்கிறார்கள். இப்போது அந்தப் பதவிகள் இல்லை.

திரு. பா. ரா. தாமஸ்: மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களை நியமிக்கும்போது, அரசிதழ் பதிவு பெற்றவரைத் தான் நியமிக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு முதுகலைப் பட்டம் தேவையில்லை என்றும் கருத்து நிலவுகிறது. அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் என்று பிரிக்கப்

படாத காரணத்தால், பணி மூப்பு அடிப்படையிலே மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள் தொடர்ந்து பணியாற்ற அனுமதி வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவிக்கு தகுதிகளைக் குறைப்பதற்கான எண்ணம் இந்த அரசுக்கில்லை. ஆனால், பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் இருப்பது பற்றிய கேள்வி இப்போது பிறந்திருப்பதால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. ம. சங்கரலிங்கம்: பதிவு பெற்ற தலைமை ஆசிரியர் மாநில அளவிலான சீனியாரிட்டிபடி நியமிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். பதிவு பெறாத தலைமை ஆசிரியர்களிலிருந்து, அவர்கள் சீனியாரிட்டியை வைத்து, பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். எனவே மாநில அளவிலே தலைமை ஆசிரியர்கள் சீனியாரிட்டிப் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கின்றதா ? மாநில அளவிலே பட்டதாரி ஆசிரியர்கள் சீனியாரிட்டிப் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: சீனியாரிட்டி அடிப்படையிலே பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்களை நியமித்தது முன்னால், 1978 க்குப் பிறகு கிடையாது. இங்கே தந்துள்ள விவரப்படி மாநில அளவிலே பணி மூப்பு அடிப்படையிலே பதவி உயர்வு தரப் பட்டிருக்கிறதென்று சொல்லப் பட்டிருக்கிறது. வேறு விவரங்களில்லை. தனியாகக் கேள்வி கேட்டால், சொல்லப்படும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: என்னுடைய துணைக் கேள்விக்கு அமைச்சரவர்களிடமிருந்து தெளிவான பதில் கிடைக்கவில்லை. 1974-ல் 'பி' பிரிவிலிருந்து, மாவட்ட அளவிலே பணிமூப்பு அடிப்படையிலே அரசிதழ் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்களாக மாநிலத்தில் பல்வேறு இடங்களில் பதவி உயர்வு செய்யப்பட்டவர்கள், திடீரென்று சென்ற ஆண்டு, எம்.ஏ. பட்டம் அவர்களுக்கில்லை என்ற காரணத்தால், பணியிறக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் 'ஏ' பிரிவில் மாநில அளவில் பணி மூப்பு அடிப்படையிலே பதவி உயர்வு செய்யப்பட்டவர்கள் பணியிலிருந்து இறக்கப்படவில்லை. எனவே 'ஏ' பிரிவுக்கும், 'பி' பிரிவுக்கும் இன்னும் பாகுபாடு காட்டக்கூடிய நிலைமை இருக்கிறதென்பதைத் தெரிவிக்கிறது. இது நியாயம்தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் முதலிலே கேட்ட கேள்வி இந்த அளவிற்கு விளக்கமாக இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்பது, 'ஏ' பிரிவில் பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்களாக இருந்தவர்கள் தொடர்ந்து இருக்கிறார்கள், ஆனால் அதே நிலையில் இருந்த 'பி' பிரிவு தலைமை ஆசிரியர்கள் கீழே இறக்கப்பட்டிருக்கிறார்கள்

என்பதுதான். மாண்புமிகு உறுப்பினரவர்கள், தலைமை ஆசிரியர்கள் பொறுப்பிலிருந்து கீழே இறக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். பதிவு பெற்ற தலைமை ஆசிரியர்கள் இல்லை என்ற நிலைமையைச் சொல்லும் போது, இந்தப் பாகுபாடு இருக்குமானால் அதைப் பற்றி அரசு விசாரிக்கும்.

ஆசிரியர்களுக்குப் பரிசுகள்.

* 98. வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்

செல்வி அ. லீலாவதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறோம்—

(அ) உயர் நிலைப் பள்ளிகளில் 1978, மார்ச்-ஏப்ரலில் நடந்த பள்ளி இறுதித் தேர்வுகளில் 100 சத விகிதம் மாணவர் தேர்ச்சி பெற்றுள்ள அரசுப் பள்ளிகள், தனியார் பள்ளிகள், உள்ளாட்சித் துறைப் பள்ளிகள், ஆதி திராவிட நலத் துறைப் பள்ளிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இத்தகைய சாதனைக்குக் காரணமான ஆசிரியர்களுக்குப் பரிசு தரும் திட்டம் பற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 1978 மார்ச் ஏப்ரலில் நடந்த பள்ளி இறுதித் தேர்வுகளில் 100 சதவிகிதம் மாணவர்கள் தேர்ச்சி பெற்ற உயர்நிலைப்பள்ளிகளின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:—

	எஸ். எஸ். எல். சி. (பதினோராம் வகுப்பு)	எஸ். எஸ். எல். சி. (பத்தாம் வகுப்பு)
அரசுப் பள்ளிகள்	42	6
தனியார் பள்ளிகள்	29	12
உள்ளாட்சித்துறை பள்ளிகள்	1	
நலத்துறைப் பள்ளிகள்		

(இ) இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த விவரங்களிலிருந்து, தனியார் பள்ளிகளைவிட, அரசுப் பள்ளிகளில் சாதனைகள் அதிகமாக இருக்கின்றன என்ற உண்மை தெரிய வருகிறது. அதனால் அரசுப் பள்ளிகளில் சாதனைகளில்லை என்ற பரவலான குற்றச் சாட்டுக்கு